# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.60/2023 | Date | : 02.12.2024 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | Taluk | : |
| Name | : **தங்கராஜ்** | Calling | : |
| Father / Husband Name | : **ராஜாகவுண்டர்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.12.2024

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சின்னாகவுண்டனூர் கிராமம், செங்காட்டில் வசித்து லாரி போக்குவரத்து அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 25-10-2021ம் தேதி, TVS மேம்பாலம் சர்வீஸ் ரோட்டில் உள்ள ஜான் பாடி பில்டர்ஸ் கம்பெனி அருகே TVS Sport இருசக்கர வாகனமும், TVS XL இருசக்கர வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. மறுநாள் மாலை சுமார் 04.30 மணியளவில் சங்ககிரி போலிசார் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து மகஜர் தயார் செய்தனர்.

2) பார்வை மகஜரில் நானும், லோகேஸ் (எ) லோகநாதன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2வது சாட்சி கையொப்பம் லோகேஸ் (எ) லோகநாதன் என்பவருடையது

ஆகும்.  **( பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–**

போலிசார் வரைந்த பிறகு கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் கேட்டுகொண்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம்.

Sd/-Thangaraj

Sd/-S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.